
## சமூக வலைதளங்களில் வலம் வருவது!





## கேரள மாநிலத்தில் இளைஞர் ஒருவருக்கு குரங்கம்மை அறிகுறி!

கோழிக்கோடு, செப். 18-

கேரள மாநிலம் மலப்புரத்தில் குரங்கம்மை அறிகுறியுடன் இளைஞர் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எடவண்ணா பகுதியைச் சேர்ந்த 38 வயது நபர், மஞ்சேசி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குரங்கு அம்மையை சர்வதேச பொது சுகாதார அவசரநிலையாக அறிவித்தது அடுத்து இந்தியாவில் உள்ள அனைத்து விமான நிலையங்களிலும் பலத்த சோதனைகளுக்கு பின்னரே வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகள் அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு துபாய் சென்று வந்த இளைஞருக்கு குரங்கம்மை அறிகுறி ஏற்பட்டுள்ளது. முதலில் அதிக காய்ச்சல் காரணமாக மஞ்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். பாதிக்கப்பட்ட இளைஞரின் மாதிரிகள் பரிசோதனைக்காக கோழிக்கோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## சமுதாய இழிவு நோய் !



சமுதாய இழிவு மனிதனுக்குக் கடுமையான நோயாக இருப்பதால் அதற்கு மருத்துவம் கடுமையாகத்தான் இருக்கும். நமது சமுதாய நோயானது, நம் சமுதாயத்தில் 100க்கு 97 பேராக இருக்கும் மக்கள் இழி மக்களாகவும், 100க்கு 3 பேராக இருக்கும் மக்கள் மேல் மக்களாகவும் இருக்கும்படியான சமுதாய அமைப்பில் இருக்கிறோம். இந்நோய்க்கு, ரண சிகிச்சை போல், அவயவ மாற்று சிகிச்சை போல், சிகிச்சை செய்தால்தான் நோய் தீரும். மற்ற சிகிச்சையால் எந்தப் பயனும் விளையாது; நோய் முற்றிக் கொண்டுதான் போகும். நல்ல வைத்தியனாகிய என்னுடைய கருத்து, நோய்க்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை அறிந்துகொள்வதுதான். சமுதாயஇழிவு நோய் எப்படி நமக்கு ஏற்பட்டது என்பதை உணர்ந்துள்ளேன்.

**தந்தை பெரியார்**

## செஞ்சியில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழா!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் அண்ணாவின் படத்திற்கு மலர் தூவி மரியாதை!

செஞ்சி, செப்.18-

பேரறிஞர்அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாள் விழா தமிழகம் முழுதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி நகர தி.மு.க. சார்பில் செஞ்சியில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் உள்ளபேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கும், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணாவின் திரு உருவப்படத்திற்கும் நகர செயலாளர்கார்த்திக் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சி யில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர் . இதில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் ஆகியோர் மாலை அணிவித்து மலர்தூவிமரியாதை செலுத்தி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன். பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் கழக நிர்வாகிகள், தொமுச நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

கோவை கூட்டத்தில் ஜி.எஸ்.டி. குளறுபடி குறித்துப் பேசிய தொழிலதிபரை அவமானப்படுத்திய

## ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

### கோவை மாவட்ட தி.மு.க. - இந்தியா கூட்டணிக் கட்சிகள் பங்கேற்பு!

கோவை, செப் 18-

கோவை டாடாபாத் பவர் ஹவுஸ் அருகில், ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் (16.9.2024) நடைபெற்றது.

பின்னர் தி.மு.க. இந்திய கூட்டணிக் கட்சிகளின் மாநில, மாவட்டத் தலைவர்கள் கண்டன உரை நிகழ்த்தினார்கள்.

கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் தலைமையில் நடைபெற்ற, இக்கூட்டத்தில், வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தொ.அ. ரவி, தெற்கு மாவட்ட திமுக செயலாளர் தளபதி முருகேசன், மாநகர் மாவட்ட திமுக அவைத் தலைவர் கணபதி ராஜ்குமார் எம்பி., கோவை மாநகராட்சி மேயர் இரா.ரங்கநாயகி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தேசிய செயலாளர் மயூரா எஸ்.ஜெயகுமார், மாவட்ட திமுக இந்திய கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள் ம.தி.மு.க. ஆடிட்டர் அர்ஜுன் ராஜ், கணபதி செல்வராஜ், ஆர்.ஆர்.மோகன்குமார், சி.பி.ஐ.எம். மாவட்டச்செயலாளர் சி.பத்மநாபன், குணசேகரன், சிவஞானம், சி.பி.ஐ. எம். ஆறுமுகம் ex. எம்எல்ஏ., மாவட்ட செயலாளர் சிவசாமி, த.பெ.தி.க. பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் குமணன், கொ.ம.தே.க.கட்சியின் விஜயகுமார், ஆதித் தமிழர் பேரவை ரவிகுமார், திராவிட தமிழர் கட்சி வெண்மணி, மாவட்ட திமுக துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், அசோக் ஆறுக்குட்டி, மாவட்ட நிர்வாகிகள், திமுக தலைமை கழக நிர்வாகிகள் பி.நாச்சிமுத்து, அ.தமிழ்மறை, திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வே.பாலசுப்பிரமணியன்,

ஆனந்த குமார், ஏர் போர்ட் ராஜேந்திரன்,டி.பி.சுப்பிரமணியன்,துணை மேயர் இரா.வெற்றிச் செல்வன், திமுக இந்திய கூட்டணிக் கட்சிகளின் நகர, ஒன்றிய, பகுதி, வார்டு, பேரூராட்சி செயலாளர்கள், திமுக இந்திய கூட்டணிக் கட்சிகளின் அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், தி.மு.க. இந்திய கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்கள், தொண்டர்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை

## தி.மு.க. மகளிர் அணி - தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

### ஜெ.ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ப.இராணி அறிக்கை!

சென்னை,செப்.18-

தி.மு.க. மாநில மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு, சமுக வலைத்தள குழு, ஆலோசனைக்குழு நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்.

கழகத்துணைப்பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையில் மகளிரணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிரணி இணைச்செயலாளர் குமரிவிஜயகுமார், மகளிர் தொண்டரணி இணைச்செயலாளர் தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில் தஞ்சாவூர் ஜெயராம் மஹால். 20/09/2024 வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறும்.

நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறோம். பொருள்:

1கழக ஆக்க பணிகள்.

2.2026 சட்டமன்றத் தேர்தலில் மகளிரணி பங்களிப்பு.

3.மகளிரணி உறுப்பினர் சேர்த்தல். இவ்வாறு ஜெ. ஹெலன் டேவிட்சன், மாநில மகளிரணிச்செயலாளர். நாமக்கல் ப. இராணி, மாநில மகளிர் தொண்டரணிச்செயலாளர் அறிக்கை விடுத்துள்ளனர்.

## மாதவரத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

சென்னை, செப்.18-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில்,பேரறிஞர் பெருந்தகை அறிவுலக மேதை அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் பகுதியில் கழக கொடி ஏற்றி, அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் கிளை கழக அலுவலகத்தில் அமைந்துள்ள கழக கொடிக்கம்பத்தில் இருவண்ணக் கொடியை, 17 வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமையில், வட்டக் கழக நிர்வாகிகள் சி.மூர்த்தி, சி . பாலாஜி, வி.பார்த்தசாரதி, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ்.சிவக்குமார்,மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.சண்முகபிரியன், பாகமுகவர்கள் என்.நாகராஜன்,டி திவாகர், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என் .அஜய் தென்னவன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஜி.சேகர், எம்.ஜான்சன், ஜி.பூபாலன், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலையில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு கழக கொடி ஏற்றி வைத்தார்.

பின்னர் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா, தந்தை பெரியார், முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து தூய்மை பணியாளர்கள் 50க்கும் மேற்பட்டவர்கள் திராவிட இயக்க தலைவர்களின் திருவுருவப்படங் களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

திருச்சி

## ரயில் பராமரிப்பு பணி: ரயில்கள் ரத்து!

ஈரோடு, செப்.18-

திருச்சி - திண்டுக்கல் இடையே ரயில் பாதை பராமரிப்பு நடக்க இருப்பதால் ஈரோடுதிண்டுக்கல் வரை பகுதியாக ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. செப்டம்பர்.18 முதல் 23ம் தேதி வரையிலும், செப்டம்பர். 25 முதல் 30 வரையிலும் திண்டுக்கல்லில் இருந்து செங்கோட்டை புறப்படும். வண்டி எண் 16845 ஈரோட்டிலிருந்து திண்டுக்கல் வரை ரத்து செய்யப்படுகிறது என திருச்சி கோட்டம் அறிவித்துள்ளது.

நெல்லை மாநகர் முழுவதிலும்

## தி.மு.க. பவளவிழா - கழகக் கொடியேற்று விழா !

### மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்பு !

நெல்லை, செப்.18-

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக பவள விழாவை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் நெல்லை பகுதி, தச்சை பகுதி, பாளை பகுதி மேலப்பாளையம் பகுதி ஆகிய 4 பகுதிகளில் உள்ள வார்டுகளைச் சேர்ந்த 32 இடங்களில் கழகக் கொடி கம்பங்கள் புதுப்பிக்கப்பட்டு கழக இருவண்ண கொடியேற்றும் நிகழ்வு 15.09.2024 அன்று வெகு சிறப்பாக மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் முன்னிலையில் நடைபெற்றது.

அதுபற்றிய விவரம் வருமாறு:-

நெல்லை பேட்டை பகுதி செயலாளர். நமச்சிவாயம் தலைமையில் 15,17,19,22, 23,26,27,25, ஆகிய வார்டுகளில் கழக முன்னோடிகள்,கழக நிர்வாகிகள் கொடியேற்றினர்.

தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் தலைமையில் 4,2,13 ஆகிய வார்டுகளில் கழக முன்னோடிகள் கழக நிர்வாகிகள் கொடியேற்றினர்.

பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லத்துரை தலைமையில் 33, 37, 36,7, 35, 9,32, ஆகிய வாடுகளில் கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள் கொடி ஏற்றினர்.

மேலப்பாளையம் பகுதியில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் பகுதி செயலாளர் சாகுல் ஹமீது தலைமையில் 54,41,51,46 ஆகிய வார்டுகளில் கழக முன்னோடி கள், கழக நிர்வாகிகள் கொடியேற்றினர்.

இந்நிகழ்வுகளில் கழக மூத்த முன்னோடிகள் சட்ட திட்ட குழு உறுப்பினர் சுப.சீதாராமன், ஆறுமுகம், கோவிந்தராஜ், தம்பிரான்,வேலு, ராஜாமணி, சாமுவேல், ஜோதிபாஸ், ஆப்டிகல் பாலா,பரமசிவன்,செல்லப்பா, வீரபாண்டியன், பிச்சையா, செய்யது மைதீன் ஆகியோர் பங்கேற்று கழகக் கொடியை ஏற்றி வைத்து சிறப்பித்தனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்ட கழகச் செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் செய்திருந்தனர்.

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

**குறுகிய கால மின்னணு ஒப்ப அறிவிப்பு**

கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (இ) அவர்களால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது

**M.E.D.C.No.M1 / 2075/ 2024**
**Hiring of Additional High Capacity Dewatering Pumps (80 - 100 HP) (6000 LPM) for Zone I to V for a period of Two Months between September - 24 to December - 24**

பணியின் தோராய மதிப்பு : ரூ.1,70,62,395/-
முன் வைப்பு தொகை : பணியின் மதிப்பில் ஒரு சதவீதம்
ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : 25.09.2024 பிற்பகல் 3.00, மணி
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 26.09.2024 பிற்பகல் 3.30 மணிக்கு
மேலும் விவரங்களுக்கு : https://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 3750 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் (இ)**



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்திலும் சமத்துவபுரம் பகுதியிலும் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 146 வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத்காந்தி மலர் தூவி மரியாதை செலுத்தினார். மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் குமுதா குமார், ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே.எல். ஈஸ்வரப்பன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, பி.பூங்காவனம், சேஷாவெங்கட், க.சுந்தரம், து.தில்லை பெரியசாமி, எஸ்.வினோத், அப்துல்லா, வேதா சீனிவாசன், தியாகராஜன், வழக்கறிஞர் ஜெயக்குமார், சிவா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் தந்தை பெரியாரின் 116வதுபிறந்த நாளை முன்னிட்டு அவரது உருவப்படத்திற்கு மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.பி.ஏழுமலை, கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் டாக்டர் வி.எஸ்.விஜய், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மண்டல குழுதலைவர் வீனஸ் நரேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.கதிரேசன், மா.ப.அன்புநிதி, சி.சந்திரசேகர், பகுதி செயலாளர்கள் வி.ஜி.கே.சுந்தர விஜி, முரளி கிருஷ்ணன், தயாள் ராஜ், சசிகுமார், மாமன்ற உறுப்பினர் வி.எஸ்.முருகன், பொறியாளர் அணி அமைப்பாளர் கே.ஆர். அசோக், வீ.கே.கருணாநிதி, அயலக அணி டி.லோகநாதன், மாநகர தொண்டர்அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ரவி, மாநகர துணை செயலாளர் முன்னா ஷெரீப்,சிலம்பரசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.